O.S. No: 170/2018

பெயர் : பசுபதி

**வா.சா. 2**

16-04-2025

**குறுக்கு விசாரணை**

நான் கடந்த 30 வருட காலமாக பத்திர எழுத்தராக இருக்கிறேன். என்னுடைய எண் A 545TNJ91. எந்த தேதியில் இந்த பதிவு ஏற்பட்டது என்று ஞாபகமில்லை. நான் ஒரு நாளைக்கு சராசரியாக 3 பத்திரங்கள் பதிவு செய்வேன் . இவ்வாறு பதிவு செய்வதற்கு எழுத்து கட்டணம் உண்டு . அதற்கு ரசீது கொடுப்பதில்லை. ஒரு கிரைய பத்திரம் எழுதுவதற்கு அரசால் நிரணயக்கப்பட்ட எழுத்து கூலி எவ்வளவு என்று அதற்குரிய GO வை பார்க்க வேண்டும். அவ்வாறு ஒவ்வொரு விதமான ஆவணத்திற்கும் எழுத்து கூலி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது . அதற்கு ஆவணத்தை பார்த்து தான் சொல்ல முடியும் . எனக்கு வாதி கார்த்திகேயன் நண்பர். அவருக்கு எத்தனை சகோதரர்கள் என்று தெரியாது . இந்த வழக்கை நடத்துவது கார்த்தியின் பவர் ஏஜெண்ட் மோகனசுந்தரம் என்று நான் எனக்கு வந்த சம்மனை பார்த்து தெரிந்துக்கொண்டேன் . இந்த வழக்கில் நான் தரப்பினரில்லை . இந்த வழக்கில் நான் மனு எதுவும் போடவில்லை . பிரமாண வாக்குமூலம் கொடுத்துள்ளேன். பிரமாண வாக்குமூலம் வாதியின் வழக்கறிஞர் தான் தயார் செய்தார். வாதியின் வழக்கறிஞரை கார்த்திகேயன் தான் அறிமுகம் செய்தார் . Reopen petition இல் உள்ள பிரமாண வாக்குமூலத்தில் நான் தான் கையெழுத்து செய்திருக்கிறேன். அதை வாதியின் வழக்கறிஞர் தான் தயார் செய்தார். நான் முதல் விசாரணை சாட்சியம் என்று அளித்தேன் என்று ஞாபகமில்லை. முதல் விசாரணை டைப் செய்து என்னிடம் வழக்கறிஞர் அலுவலகத்தில் கையெழுத்து

வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள். அந்த கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன இருந்தது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் ஞாபகமில்லை . கார்த்திகேயனுக்கு 10, 15 பத்திரம் எழுதியிருப்பேன் . ஞாபகமில்லை. மோகனசுந்தரத்திற்கும் 10, 15 பத்திரத்திற்கு மேல் எழுதியிருப்பேன். வாதியின் தம்பி ரமேஷை பார்த்தால் தெரியும் . ஞாபகமில்லை. ரமேஷிற்கு நான் எதுவும் எழுதினேனா என்றால் ஞாபகமில்லை . சமிபத்தில் மோகனசுந்தரத்திற்கோ , கார்த்திகேயனுக்கோ ஏதாவது பத்திரம் எழுதினேனா என்றால் ஞாபகமில்லை . எனக்கு லஞ்ச ஒழிப்பு வழக்கில் கும்பகோணம் தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் எனக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்றால் நான் அதில் மேல் முறையீடு செய்துள்ளேன் . இதே நீதிமன்றத்தில் வாதி கார்த்திகேயனுக்கோ , மோகனசுந்தரத்திற்கோ நான் சாட்சியமளித்திருக்கிறேனா என்றால் ஞாபகமில்லை. அசல் வழக்கு 143/2018 என்ற வழக்கில் இதே நீதிமன்றத்தில் நான் சாட்சிமளித்திருக்கிறேன் என்றால் பார்த்தால் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் ஓ.எஸ் 143/2018 இல் நான் வா.சா. 3 ஆக உள்ளேன் என்றால் ஆமாம். அந்த வழக்கு மோகனசுந்தரத்திற்காக முருகானந்தம் தாக்கல் செய்தது என்றால் சரி. அதில் நான் கடன் பத்திரம் தயார் செய்ததாக சாட்சியமளித்திருக்கிறேன் என்றால் சரி. அதில் 18/04/2015 என்பது 18/04/2018 ஆக திருத்தப்பட்டுள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு அது பற்றி தெரியாது . பொதுவாக ஒரு பத்திரம் பதிவிற்கு வந்தால் ஸ்டாம்ப் பேப்பர் யார் வாங்குவார்கள் என்றால் பாரட்டி தான் வாங்குவார். கிரைய உடன்படிக்கை ரத்து பத்திரம் , மோகனசுந்தரத்திற்கோ, கார்த்திகேயனுக்கோ எழுதி கொடுத்திருக்கிறேனா என்றால் நிறைய எழுதி கொடுத்திருக்கிறேன். கொடுத்த கடன் பணம் வசூல் ஆகிவிட்டால் கிரைய

உடன்படிக்கை ரத்து பத்திரம் எழுதுவது பழக்கமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பத்திரம் எழுத சொன்னால் நான் எழுதி தருவேன் . தரப்பினர்களை கேட்டு அவர்கள் சொல்வதை பொறுத்து பத்திரம் எழுதுவோம் . வா.சா.ஆ.5 இல் சாட்சி கையெழுத்து ஸ்டாம்ப் பேப்பரில் இல்லை . பச்சை பேப்பரில் உள்ளது. அதில் தேதியில்லை என்றால் சரி. அதை யார் எழுதியது என்று தெரியாது . யாரோ வக்கீல் எழுதியதாக சொன்னார்கள். வா.சா.ஆ. 6 லும் பச்சை பேப்பரில் தான் கையெழுத்து உள்ளது. தேதியில்லை என்றால் சரி . வா.சா.ஆ. 6 இல் Drafted by என்று நான் கையெழுத்து செய்திருக்கிறேன் . இது தொடர்பாக பதிவேடு எதுவும் பராமரிக்கிறேனா என்றால் இல்லை. சட்டப்படி அவ்வாறு பதிவேடு பராமரிக்கப்பட வேண்டும் என்றால் ஆமாம் . ஆனால் அவ்வாறு செய்வதில்லை . 22/08/2024 இல் என்னிடம் காண்பிக்கப்படும் கிரைய ஒப்பந்த ரத்து பத்திரம் என்னால் தயார் செய்யப்பட்டது தான். அதில் நான் தான் கையொப்பம் செய்திருக்கிறேன் . அதில் D மோகனசுந்தரத்திற்கும், அலித் ஹாசனுக்கும் இடையே ஏற்பட்டது என்றால் ஆமாம். ரூபாய் 5 லட்சம் ரொக்கமாக கார்த்திகேயன் , சம்சாத் பேகத்திற்கு கொடுத்தார் . டினாமேசன் ஞாபகமில்லை. வா.சா.ஆ.1 ஏற்பட்ட தேதியில் எத்தனை பத்திரம் நான் எழுதினேன் என்று ஞாபகமில்லை. வா.சா.ஆ. 2 ஏற்பட்ட தேதியில் நான் எத்தனை பத்திரம் எழுதினேன் என்று ஞாபகமில்லை . அன்றைய தேதியில் யார் யாருக்கு நான் பத்திரம் எழுதி கொடுத்தேன் என்று ஞாபகமில்லை . போனதடவை சாட்சியம் சொல்ல வந்த போதும், இன்றும் நான் மோகனசுந்தரத்துடன் தான் வந்தேனா என்றால் இல்லை. நான் தனியாக என் பைக்கில் தான் வந்தேன் . கார்த்திகேயன், மோகனசுந்தரம் சம்மந்தப்பட்டவர்கள் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார்களா என்றால் இல்லை. சம்பந்தப்பட்டவர்கள் வந்துள்ளார்கள் , நான் அவர்களுடன் தான்

நீதிமன்றத்திற்கு வந்தேன் என்றால் சரியல்ல . கார்த்திகேயன், மோகனசுந்தரம் எனக்கு மிகவும் வேண்டப்பட்டவர்கள் என்பதால் நான் பொய்யாக முதல் விசாரணை சாட்சியத்தில் கண்ட விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதிகளில் எந்த பண பரிவர்தணையும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல . பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court, Kumbakonam.